## தொகுதி மறுசீரமைப்புக் குறித்து ஒரு வார்த்தைக் கூட பேசாத மோடி!

# அடுத்தாண்டு தமிழகத்தில் நடக்கவுள்ள சட்டமன்றத் தேர்தலில் மட்டுமே குறியாக இருக்கிறார்!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் விமர்சனம்!

சென்னை, ஏப். 8 - ராமேஸ்வரத்தில் புதிய ரயில்வே பாலத்தை திறந்து வைத்த பிரதமர் மோடி தொகுதி மறுசீரமைப்புக் குறித்து ஒரு வார்த்தைக் கூட பேசவில்லை. அடுத்தாண்டு தமிழகத்தில் நடக்கவுள்ள சட்டசபை தேர்தலில் மட்டுமே அவர் குறியாக இருப்பதாக “தினகரன்” நாளேடு தலையங்கத்தில் தெரிவித்துள்ளது.


தினகரன்
ஏப்ரல் 7, 2025 திங்கட்கிழமை
தேர்தல் நாடகம்...

அது வருமாறு:

நாடாளுமன்றத் தேர்தல் நடக்கும் சமயத்தில் தமிழகத்தின் மீது அக்கறை கொண்டு அடிக்கடி இங்கு வந்த பிரதமர் மோடி, மீண்டும் தனது வித்தையை ராமேஸ்வரத்தில் நேற்று அரங்கேற்றி விட்டுச் சென்றிருக்கிறார். பாம்பன் கடலில் ரூ.550 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய ரயில்வே பாலத்தை திறந்து வைத்த அவர், ரூ.8 ஆயிரத்து 300 கோடியிலான பணிகளுக்கு அடிக்கல்லும் நாட்டியுள்ளார். ராமேஸ்வரத்தை சிறந்த சுற்றுலாத்தலமாக மாற்றிட புதிய ரயில் சேவையும் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

இவ்விழாவிற்கு வந்திருந்த பிரதமர் மோடி வழக்கம்போல் தனது அரசியல் அவதூறுகளை அவிழ்த்து விட்டு சென்றுள்ளார். தமிழகத்தில் உள்ளவர்களுக்கு தமிழிலேயே கையெழுத்து போடத் தெரியாது என்பது தொடங்கி, நாங்கள் அள்ளிக் கொடுத்த நிதியை கணக்கில் கொண்டால், தமிழகத்தில் பாலாறும், தேனாறும் ஓடியிருக்க வேண்டும் என்கிற ரீதியில் புனைகதைகளை பரப்பி விட்டுள்ளார்.

தமிழ்நாட்டின் கட்டமைப்பே, ஒன்றிய அரசின் முதன்மை நோக்கம் எனக் கூறிய அவர், கடந்த 10 ஆண்டுகளில் ரயில்வே துறை சார்பில் தமிழ்நாட்டிற்கு 7 மடங்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

தமிழகத்திற்கு ரயில்வே துறை அவ்வளவு நிதி ஒதுக்கியிருந்தால், ரயில்வே வளர்ச்சி பன்மடங்கு பெருகியிருக்கும். ரயில்வேயை பொறுத்தவரை நாகர்கோவிலில் இருந்து சென்னைக்கான மெயின் லைன் எனப்படும் தஞ்சாவூர், மயிலாடுதுறை வழிப்பாதையில் இன்று வரை இரட்டை ரயில்பாதை இல்லை. ரயில் நிலைய பங்களுக்கான நடைமேடைகள், பிளாட்பார்ம்கள் விரிவாக்கம் உள்ளிட்ட அடிப்படை கட்டமைப்பு வசதிகளும் இதுநாள் வரை ஒன்றிய அரசால் கண்டு கொள்ளப்படவில்லை. புதிய ரயில்களை பொறுத்தவரையில் தென் மாவட்டங்களில் இருந்து இன்று வரை மும்பைக்கு ஒரு தினசரி ரயில் கூட இல்லை என்கிற சோகமே நிலவுகிறது.

தமிழகமே வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட போது, வெள்ளச் சேதத்திற்கு நிதியை தர மறுத்த ஒன்றிய அரசு, இந்தியை தமிழ்நாட்டில் அமல்படுத்தினால் மட்டுமே கல்வி நிதி தருவோம் எனக் கறார் பேசிய ஒன்றிய அமைச்சர் உள்ளிட்ட பலவற்றை மறைத்துவிட்டு, நேற்று பிரதமர் மோடி தமிழ்நாட்டிற்கு தாராளமாக நிதி வழங்கியுள்ளோம் என பொய்களை அள்ளி விட்டுள்ளார். கடந்த 10 ஆண்டுகளில் ஒன்றிய அரசால் கட்டி கொடுக்கப்பட்ட கான்கிரீட் வீடுகளையும், குடிநீர் குழாய்களையும் மெச்சிய பிரதமர் மோடி, தமிழ்நாட்டில் இருந்து பெறும் ஜிஎஸ்டி வரியினங்களை திருப்பித் தருவதில் காட்டிய கஞ்சத்தனம் குறித்து கருத்து எதுவும் சொல்லவில்லை.

மருத்துவப் படிப்பை தமிழிலே வழங்குங்கள் என புத்திமதி வேறு. நீட் தேர்வில் இருந்து விதி விலக்கு கேட்டுப் பல ஆண்டுகளாக தமிழகம் போராடி கொண்டிருக்கிறது. அதுகுறித்து பிரதமருக்கு கிஞ்சித்தும் கவலை இல்லை என்பதுதான் அவரது உரையின் வெளிப்பாடு.

மக்கள் தொகை அடிப்படையில் தொகுதி மறுசீரமைப்பு என்பது குறித்து பல மாநிலங்கள் வருத்தப்படும் நிலையில், தமிழகமும் அதற்கான ஆதங்கத்தை வெளிப்படுத்தி உள்ளது. இதுகுறித்து பிரதமர் மோடி, தமிழகத்தில் ஒரு வார்த்தைக் கூட பேசவில்லை.

அவருக்கு அடுத்தாண்டு தமிழகத்தில் நடக்கவுள்ள சட்டசபை தேர்தல் மட்டுமே குறியாக உள்ளது. அதற்காக எந்தக் கட்சியை உடைக்கலாம். எந்தக் கட்சிகளை கூட்டணியில் இணைக்கலாம் என்கிற இலக்கோடு, தமிழக மக்களுக்காக நேற்று நீலிக் கண்ணீர் வடித்துவிட்டுச் சென்றுள்ளார். ஆனால், தமிழக வாக்காளர்கள் உங்களை கவனித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை பிரதமர் மறந்துவிட வேண்டாம்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு - ஆந்திரா - ஒடிசா - மாநிலங்களிலிருந்து

# கனிமங்களைத் தோண்டி எடுக்கும் திட்டம் உள்ளதா?

## மாநிலங்களவையில் இரா.கிரிராஜன் கேள்வி!



புதுடெல்லி, ஏப். 8 - தமிழ்நாடு, ஆந்திரா, ஒடிசா மாநிலங்களிலிருந்து கனிமங்களைத் தோண்டி எடுக்கும் திட்டம் ஒன்றிய அரசிடம் திட்டம் உள்ளதா? என்று மாநிலங்களவையில் கழக உறுப்பினர் வழக்கறிஞர் இரா.கிரிராஜன் கேள்வி எழுப்பினார்.

தமிழ்நாட்டில் அணு அல்லது அணு கனிமங்களைத் தோண்டி எடுக்கும் திட்டம் இல்லை என, பிரதமர் நரேந்திர மோடியிடம் மாநிலங்களவை கழக உறுப்பினர் வழக்கறிஞர் இரா. கிரிராஜன் எழுப்பிய கேள்விக்கு, ஒன்றிய அரசு பதிலளித்துள்ளது.

தமிழ்நாடு, ஆந்திரா, ஒடிசா ஆகிய மாநிலங்களிலிருந்து அணு அல்லது அணு கனிமங்களைத் தோண்டி எடுக்கும் திட்டம் ஏதும் ஒன்றிய அரசிடம் உள்ளதா என்றும், அணு கனிமங்கள் இயக்குநரகத்தின் மண்டல அலுவலகத்தை தமிழ்நாட்டில் அமைப்பதற்கு ஒன்றிய அரசிடம் உள்ளதா என்றும் பிரதமர் நரேந்திர மோடியிடம், தி.மு.க. எம்.பி. கிரிராஜன் கேள்வி எழுப்பி இருந்தார்.

இவற்றிற்கு பிரதம மந்திரி அலுவலக இணை அமைச்சர் ஜிதேந்திர சிங் அளித்துள்ள பதிலில், தமிழ்நாடு, ஆந்திரா, ஒடிசா மாநிலங்களில் அணு அல்லது அணு கனிமங்களை எடுப்பதற்கு கடந்த 2 ஆண்டுகளில் எந்த புதிய திட்டமும் பரிந்துரைக்கப்பட வில்லை என பதிலளித்துள்ளார்.

அணு கனிமங்கள் இயக்குநரகத்தின் மண்டல அலுவலகத்தை தமிழ்நாட்டில் அமைக்கும் திட்டமும் இல்லை என்றும் பதில் அளிக்கப்பட்டுள்ளது.

## நீலகிரி மாவட்டத்திற்கு 6 புதிய திட்டங்களை அறிவித்த

# கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி!

## மாவட்டப் பொறுப்பாளர் கே.எம்.ராஜு அறிக்கை!



நீலகிரி, ஏப். 8 - நீலகிரி மாவட்டப் பொறுப்பாளர் கே.எம். ராஜு விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

நீலகிரி மாவட்டத்தில் உதகை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை திறந்து வைத்தும், அரசு நலத்திட்டங்கள் வழங்கும் விழா நிகழ்ச்சியில் கலந்துகொண்டு சிறப்பிக்க ஏப்ரல் 5ம் தேதி நீலகிரி மாவட்டம், உதகைக்கு தமிழக முதல்வர் அவர்கள் வருகை தந்தார்கள்.

நீலகிரி மாவட்டத்திற்கு மேட்டுப்பாளையத்திலிருந்து உதகைக்கு வருகை தந்த தமிழக முதல்வர் அவர்களுக்கு கோத்தகிரி, கட்டபெட்டு, உதகை சேரிங்கிராஸ் பகுதிகளிலும் உற்சாக வரவேற்பு வழங்கப்பட்டது. இந்த வரவேற்பு நிகழ்ச்சியில் கழக நிர்வாகிகள் மட்டுமின்றி, தொழிலாளர்கள், வியாபாரிகள், மாணவ - மாணவியர், பொதுமக்கள் என ஏராளமானவர்கள் கலந்துக்கொண்டு முதல்வர் அவர்களை வரவேற்றது, மாவட்ட மக்கள் நம் முதல்வர் அவர்கள் மீது வைத்துள்ள அன்பினை எடுத்துகாட்டுவதாக அமைந்தது, இதற்காக மாவட்ட கழகத்தின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியினை அனைவருக்கும் தெரிவிக்கிறோம்.

6.4.2025 ஞாயிற்றுக்கிழமை உதகை அரசு கலை கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் கலந்துக் கொண்டு 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி மாவட்ட மக்களுக்கான 6 புதிய வரலாற்று சிறப்பு மிக்க திட்டங்களை அறிவித்து சென்றது நீலகிரி மாவட்டத்தின் மீது கழக தலைவர் தளபதி அவர்கள் எவ்வளவு அன்பு வைத்துள்ளார்கள் என்பதற்கு சான்றாக அமைந்தது.

தமிழகத்தின் முதல்வராக பொறுப்பேற்று 2வது முறையாக நீலகிரி மாவட்டத்திற்கு வருகை தந்து நீலகிரி மாவட்டத்திற்கு பெறுமை சேர்த்த கழக தலைவர் தளபதி அவர்களுக்கு மாவட்ட கழகத்தின் சார்பில் நன்றியை தெரிவித்து மகிழ்வதுடன், நம் கழக தலைவர் அவர்களின் வருகைக்காகவும், ஒவ்வொரு வரவேற்பு வழங்கும் நிகழ்ச்சிகளில் கலந்துகொண்ட கழகத்தின் ஒவ்வொரு தொண்டர்கள், செயல்வீரர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட அனைவருக்கும் நீலகிரி மாவட்ட திமுக சார்பில் நன்றியை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



திராவிட முன்னேற்றக் கழக அயலக அணி சார்பில் தி.மு.கழக அயலக அணி குவைத் நாட்டின் பொறுப்பாளர் சிதம்பரம் ந.தியாகராஜன் ஒருங்கிணைப்பில் ”கலைஞர் நூற்றாண்டு நினைவு கோப்பை–2025” மாபெரும் கிரிக்கெட் தொடரின் தொடக்க விழா நடைபெற்றது. இந்த கிரிக்கெட் தொடரின் தொடக்க விழாவில் கழக அயலக அணியின் மாநில துணைச்செயலாளர்கள் செ.உமாராணி, விஜயன் ராமகிருஷ்ணன், கன்னிகை ஜி.ஸ்டாலின், பரிதிஇளம்சுருதி ஆகியோர் காணொளி மூலம் போட்டிகளை தொடக்கி வைத்து வாழ்த்துரை வழங்கினர்.

## இனமானமா? வெகுமானமா?

# Stalin is more dangerous than Karunanidhi!



“ஏப்ரல் 6 ஆம் தேதி புனிதமான இராம நவமி நாளில், தமிழ் நாட்டின் எனது சகோதர, சகோதரிகளைச் சந்திப்பதை நான் ஆவலுடன் நோக்கிக் காத்திருக்கிறேன். புதிய பாம்பன் இரயில் பாலம் திறந்து வைக்க உள்ளேன். இராமநாதபுரம் சாமி ஆலயத்தில் நான் பிரார்த்தனை நடத்தவும் உள்ளேன். வளர்ச்சிப் பணிகள் தொடங்கி வைத்து அடிக்கல் நாட்டவும் உள்ளேன்” என்று பிரதமர் மோடி தமிழ் நாட்டுக்குத் தனது வருகை குறித்துப் பதிவு செய்து நாடகமாடி இருக்கிறார். தமிழ்நாட்டு மக்கள் புயல் வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட நேரத்தில் வந்து எட்டிக் கூடப் பார்க்காத பிரதமர் மோடி, இப்பொழுது சகோதர சகோதரிகள் என்று உறவு கூறி அழைக்கிறார்.

கல்விக்குத் தரவேண்டிய ரூ 2,152 கோடி தரவில்லை. இந்தி மொழியைப் புகுத்தி மும்மொழித் திட்டத்தை ஏற்றுக் கொள் என்று கட்டாயப்படுத்துகிறார்; ஜி.எஸ்.டி வரி வசூலித்த தொகையில் ஒன்றிய அரசு மாநில அரசுக்குத் திருப்பிச் செலுத்த வேண்டியதைச் செலுத்தவில்லை. மேலும், அவர் தமிழ்நாட்டுக்குத் தரவேண்டிய வெள்ள நிவாரணத் தொகை ரூபாய் 35 ஆயிரம் கோடி நிதியைத் தராமல், தனது கார்ப்பரேட் கூட்டாளிகளான அம்பானி, அதானி, நீரவ் மோடி போன்ற கும்பலுக்கு ரூபாய் 25 இலட்சம் கோடி இரத்து செய்ததை மறந்து தமிழ்நாட்டு மக்களைச் சகோதர, சகோதரி உறவு எனப் பிரதமர் பூம்பூம் மாடு வேடம் தாங்கி நாடகம் நடத்திக் கொண்டிருக்கிறார். மதுரையில் ஒற்றைச் செங்கல்லை வைத்துப் பூமி பூசை போட்டுத் தொடங்கி வைக்கப்பட்ட எய்ம்ஸ் மருத்துவமனை இன்னும் கைம்பெண் கோலத்தில் கட்டப்படாமல் கிடக்கின்றது; நீட் தேர்வு விலக்குச் சட்டத்திற்கு நான்காண்டுக் காலமாகியும் ஒப்புதல் அளிக்கவில்லை;

சிறைபிடிக்கப்பட்ட 97 தமிழக மீனவர்கள், மற்றும் அவர்களது 200க்கும் மேற்பட்ட படகுகள் விடுவிக்கப்படவில்லை. இலங்கை அதிபரிடம் கச்சத்தீவு மீட்பு நடவடிக்கைகள் குறித்து பேசாதது ஏன்? தொகுதிகள் மறுசீரமைப்பு எனும் பெயரால் தமிழகத்தில் எட்டுத் தொகுதிகள் குறைக்கப்பட்டுத் தென் மாநிலப் பகுதிகள் பாதிப்புக்குள்ளாகும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. வக்ஃபு புதிய சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்து இஸ்லாமிய மக்களின் வாழ்வாதாரத்தைச் சீர்குலைத்துள்ளது. இப்படியான ஒட்டு மொத்தத் தமிழ் மக்களின் நலனைப் புறக்கணித்த நிலையில், பிரதமர் மோடி “சகோதர சகோதரிகளான தமிழக மக்களைப் பார்க்க வருகிறேன்” என்று பித்தலாட்ட அறிக்கை மூலம் கபட நாடகமாடுகிறார்.

ஒன்றிய பா.ஜ.க அரசு வேலைவாய்ப்புகளை வழங்கும் என்ற வாக்குறுதிகளுக்கு மாறாக, இருக்கும் வேலைகளைப் பறிக்கும் நடவடிக்கையை எடுத்துள்ளது. ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலை தருவோம் என்ற வாக்குறுதியைக் காற்றில் பறக்க விட்டு இருக்கும் நிறுவனங்களுக்கும் பூட்டு போடும் நிலையை உருவாக்கியுள்ளது. பிரதமர் மோடியின் 11 ஆண்டுகள் ஆட்சியில் 9,31,644 நிறுவனங்களுக்குப் பூட்டு போட்டதுடன் 5 கோடி பேர் வேலையிழப்புக்குக் காரணமானது என ஏ.ஐ. தொழில் நுட்பத்தில் சாட்போட், க்ரோக் அளித்த பதிலில் அம்பலம் ஆகி உள்ளது.

அதுமட்டுமின்றி ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ நாடாளுமன்றத்தில் பேசிய பேச்சு ஒன்றினை வைத்துக் கொண்டு எப்படிப் பேசலாம் என்று பாடம் எடுக்கிறார் நிர்மலா சீதாராமன்! சென்னை எஸ். ஆர். எம் கல்லூரியில் ஒரே நாடு ஒரே தேர்தல் என்ற தலைப்பில் பேசியபோது இலங்கை சென்றிருந்த பிரதமர் “ஸ்ரீலங்கா மித்ரா விபூஷன்” எனும் “நண்பர்களில் உயர்ந்த நண்பன்” விருது வழங்கப்பட்டு இருப்பது பெருமைக்குரியது எனப் பேசுகிறார். ஒரு இலட்சத்து 37 ஆயிரம் தமிழர்களைக் கொன்று குவித்த இலங்கை இராணுவம், ஆயிரக்கணக்கான தமிழ்ப் பெண்களைப் பாலியல் கொடுமைக்குள்ளாக்கிய சிங்கள இராணுவத்துடன் ஒப்பந்தம் உள்ளிட்ட 7 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போட்டுத் திரும்பி இருக்கிறார் மோடி. இப்படிப்பட்ட பிரதமர் மோடி தமிழர்களுக்கு விரோதியாகி துரோக ஒப்பந்தம் அல்லவா போட்டுத் திரும்பி உள்ளார். தமிழர்களைச் சகோதர, சகோதரிகள் என்று அழைப்பதற்கு என்ன தகுதி இருக்கிறது?



**கவிஞர் தமிழ்தாசன்**
கழகத் தீர்மானக்குழுத் தலைவர்

தமிழ்நாட்டிற்கு போதிய நிதியை தராத ஒன்றிய அரசைக் கண்டித்து “பணமே வேண்டாம்; தாய்மொழி காப்போம்! இனமானத்தை அடமானம் வைத்து வெகுமானம் பெறும் அடிமைகள் அல்ல நாங்கள்; இது பணப் பிரச்சினை அல்ல; இனப் பிரச்சனை! மும்மொழி கொள்கையை எந்தக் காலத்திலும் ஏற்றுக்கொள்ள மாட்டோம்! இரு மொழிக் கொள்கை மட்டுமல்ல; நமது வழிக் கொள்கையும் விழிக்கொள்கையும் இதுதான்!...” என்று சட்டமன்றத்தில் எதிரிகளுக்கு அறைகூவல் விடுத்துத் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முழக்கம் செய்துள்ளார்.

இப்பொழுது இந்திய நாட்டில் சர்வாதிகார ஆட்சி நடத்தி வரும் மோடி ஆட்சியை எதிர்க்க அனைத்துச் சக்திகளும் ஒன்று கூட வேண்டும். அந்தக் கொள்கையில் உறுதியாகப் பொறுப்பேற்று நிற்கிறார் தளபதி ஸ்டாலின்!

தமிழ் மொழிக்கு எந்த வடிவத்திலும் ஆபத்து வந்து விடக்கூடாது எனக் கொதித்தெழுந்த தளபதி ஸ்டாலின், கட்டாய இந்தி மொழித் திணிப்பிற்குக் கடுமையான எதிர்ப்பு காட்டிச் செயல்பட்டு வருகிறார்.

“ஒரு நிலத்தைக் கைப்பற்றுவதற்கு அதன் கலாச்சாரத்தைக் கையில் எடுப்பதும், அதனைப் பின்தள்ளி மொழியை அழிப்பதுமே சிறந்த வழி” என்று ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொண்ட இந்தியக் குடியரசுத் துணைத் தலைவரும், மாநிலங்களவைத் தலைவருமான ஜெகதீஷ் தன்கர் குறிப்பிட்டுள்ளார். இதற்குத் தனது கடுமையான கண்டனத்தைத் தெரிவித்து முதல்வர் தளபதி ஸ்டாலின் பேசும்போது, “அவர் பழைய வரலாற்றைக் கூறினாலும், தமிழ்நாட்டின் புதிய வரலாறாக கொடிய வரலாறாக ஆகிவிடக்கூடாது என்பதற்காகத்தான் நாம் போராடிக் கொண்டிருக்கிறோம் என்றும் இந்தியாவில் கடந்த 85 ஆண்டு காலமாகத் திராவிட இயக்கம் போராடிக் கொண்டிருக்கிறது; தமிழ்நாட்டின் மொழிக் கொள்கை என்பது இந்தியாவின் மொழிகளையும் உள்ளடக்கிக்காக்கின்ற கொள்கையாக இருக்கின்றது” எனப் போரின் இடிமுழக்கமாக உரத்தத் குரலில் முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

“தமிழகத்திற்குத் தேவையான கல்வி நிதியைத் தராமல், இந்தித் திணிப்பில் மும்முரம் காட்டும் பிரதமர் மோடி, தமிழகத்திற்கு வருவதை எதிர்க்கும் நோக்கில் Go back Modi” என்று கடந்த காலத்தில் கூறிய தமிழ்நாட்டு மக்கள், இனி “Get out Modi” என்று கூறும் அளவில் அவர்கள் கொதித்துப் போயிருக்கிறார்கள்” என்று தனது உணர்ச்சிக் கொந்தளிப்பை வெளிப்படுத்தியிருந்தார் தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள்.

செம்மொழி (Classical Language) என்று கருதப்படும் தமிழ் மொழி பதினோரு (11) தகுதிப் பண்புகள் கொண்டது என மொழியியலாளர்கள் வரையறை செய்துள்ளனர்.

இப்படியான தமிழ் மொழியைப் படித்தால் “பிச்சை கூடக் கிடைக்காது; உயிர் வாழக் கூட முடியாது.....” என்று நூறு ஆண்டுகளுக்கு முன் தமிழ் கற்ற ஒரு அனுபவப் புலவர் கூறி இருக்கிறார் என்று ஒரு ஏட்டில் வந்துள்ள செய்தியை நாடாளுமன்றத்தில் ஒன்றிய அமைச்சர் நிர்மலா சீதாராமன்கள் வாசித்துக் காட்டிப் பேசியிருக்கிறார்.

அவர் கூறும் நூறாண்டுகளுக்கு முன்னால் நடந்தது என்ன? சென்னைப் பல்கலைக்கழகத்தில், சமஸ்கிருதம் படித்திருந்தால் தான் மருத்துவம் படிக்க முடியும் என்ற ஆரிய கூட்டத்தின் சதிச்செயல் தொடர்ந்தது. இதனால் தமிழ்ச் சாதியரான சூத்திரர்கள் மருத்துவம் பயில முடியாது என்ற சதித் திட்டங்களை உடைத்து, நீதிக் கட்சி ஆட்சி, தமிழ்மொழி பயின்றவர்க்கும் பயன்தரும் வகையில் சட்டம் கொண்டு வந்தது பற்றி இந்த ஆரிய நிர்மலாக்கள் பேசாமல் விட்டது ஏன்?

முன்னாள் ஒன்றிய நிதியமைச்சர் ப.சிதம்பரம் தமிழ் மொழியில் படித்தவர் தானே? முன்னாள் இந்திய குடியரசு தலைவர் அனு விஞ்ஞானி அப்துல் கலாம், சந்திரயான் திட்ட இஸ்ரோ விஞ்ஞானிகள் டாக்டர் மயில்சாமி அண்ணாதுரை, நாகர்கோயில் சிவன், வனிதா முத்தையா, வீரமுத்துவேல் போன்ற தமிழர் விஞ்ஞானிகளான இவர்களெல்லாம் தமிழில் படித்தவர்கள் இல்லையா? உலக அளவில் இந்தியாவிற்குப் பெருமை தேடித் தந்த விஞ்ஞானிகள் இல்லையா? தமிழ் படித்தால் பிச்சை எடுப்பார்களாம்.... சொல்லுகிறார்கள் அடி நாக்கில் நரம்பற்ற நிர்மலாக்கள்? என் செய்வது ஆரியக் கூட்டத்தின் அடையாளங்கள் ஆட்சியில் இருக்கின்றன.

தமிழ் மொழியைக் காட்டுமிராண்டி மொழியென்று நான் கூறுகிறேன் ... என்று. முன் பகுதி பின் பகுதியை வெட்டிக் கழித்து விட்டு முழுமையாக வெளியிடாமல். பெரியார் குறிப்பிட்டதாக சில வரியை மட்டும் துக்ளக் ஏட்டில் 1974 ஆம் ஆண்டு எழுதியதாக மக்கள் பிரச்சினையை பேசுவதை விட்டுவிட்டு மணிக்கணக்கில் மிரட்டல் தொனியில் ஆரிய நிர்மலாக்கள் நாடாளுமன்றத்தில் பேசுகிறார்கள். அந்த ஏட்டின் ஆசிரியராக இருந்த “சோ” என்பவர் யார்? அவாள் அக்கிரகாரத்து இராமசாமி தானே?

தமிழ் மொழியை நீச பாஷை என்று சங்கராச்சாரியார்கள் சொன்னார்கள். தமிழ்த் தாய் வாழ்த்து பாடிய போது எழுந்து நின்று மரியாதை செய்யாத அவர்களைப் பற்றி ஏன் பேசவில்லை? அதைப்பற்றி இந்த மாண்புமிகு நிர்மலாக்கள் என்ன சொல்லுகிறார்கள்?

பெரிய புராணம், கம்ப ராமாயணம், மகாபாரதம், சிலப்பதிகாரம், தேவாரம், திருவாசகம் என்பன போன்ற புராண நூல்கள் கடவுளின் பெருமைகள், கட்டுக்கதைகள், மூடநம்பிக்கைகள், பகுத்தறிவுக்கு ஒவ்வாத கருத்துக் குப்பைகள் எனவும், புனைச் சுருட்டுகள் எனவும் கூறினார் பெரியார். அந்தத் தமிழைக் காட்டுமிராண்டி மொழி என எதிர்த்தார். “யாராவது ஒருவர் அறிவியல் பூர்வமாக மக்களுக்கு ஏற்றவாறு தமிழ் நூல்கள் எழுதுவார்களானால்; நானே அந்த நூல்களை எல்லாம் வாங்கி எனது தலையிலும், தோளிலும் சுமந்து தமிழகத்தில் ஒவ்வொரு ஊரு ஊராகச் சென்று விற்றுப் பணம் ஈட்டித் தருவேன்”... என்று சொன்னவர் தான் பெரியார்.

பெரியார் தான் எவரும் எண்ணமுடியாத அக்காலத்தில் தமிழ் எழுத்துத் திருத்தம் செய்யத் தொடங்கி அதனை அரசு தலைவணங்கி ஏற்குமாறு செய்திருக்கிறார்.

1956 இல் “தமிழ்நாடு தமிழருக்கே” எனப் பச்சை குத்திக் கொள்ள சொன்ன பெரியார், விடுதலை ஏட்டின் தலைப்பு முகப்பில் போடச் செய்தார்.

இந்தித் திணிப்பை எதிர்த்துத் தமிழ் மொழியைப் பாதுகாப்பதற்குப் பெல்லாரி சிறை மற்றும் பல்வேறு போராட்டக் களச் சிறைகளிலும் அடைபட்டுக் கிடந்தவர் பெரியார்! தமிழ்நாடு, தமிழ் மொழி என்று காலமெல்லாம் போராடிய பெரியாரைப் பேசுவதற்கு என்ன யோக்கியதை இருக்கிறது?

தேசப்பிதா மகாத்மா காந்தியைக் கொன்ற “கோட்சே” களின் குருவான சவார்க்கர்க்குப் பாராளுமன்றத்தில் படம் திறந்து வைத்து பாராட்டுப் பத்திரம் வாசித்தவர்கள் அல்லவா? இவையெல்லாம் வரலாற்றில் அழியாப் புகழ் படைத்த ஆரியக் கூட்டத்திற்கு எப்படித்தான் நினைவு வரும்?

தமிழ்நாடு நிதிநிலை அறிக்கைக்கு முன்பு, முதல்வர் மு.க. ஸ்டாலின் போட்ட “ரூ” என்று, ரூபாய் சின்னத்தின் எழுத்தை தாய்மொழி தமிழ் எழுத்தால் இலட்சணையாக (Logo) வெளியிட்டிருந்தார். இது தேசிய அளவில் பேசும் பொருளாக ஆகிவிட்டது. உடனே ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் கொதித்து மிரட்டல் தொனியில் அறிக்கை விடுக்கிறார்.

தேசத்தின் ஒற்றுமை குறித்த உறுதிப்பாட்டை பலவீனப்படுத்தும் உணர்வைப் பரப்புவதாகும்; இது முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டும்” என்று தன் உடல் மொழியால் நக்கல், நய்யாண்டி செய்து கொக்கரிக்கிறார். ஆனால், அரசியலமைப்புச் சட்டத்தின் படி தாய்மொழி பிராந்திய வட்டார உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் கருப்பொருளாகும். இதில் எந்தப் பாதிப்பும் கிடையாது.

பா.ஜ.க. தொடர்ந்து அரசியலமைப்புச் சட்டத்தின் முகப்புரையில் 1976ஆம் ஆண்டு 42 ஆவது சட்ட திருத்தத்தில் சேர்க்கப்பட்ட செக்யூலர் (Secular), சோசியலிஸ்ட் (Socialist) என்ற வார்த்தைகள் நீக்கப்பட்டுள்ள புதிய புத்தகத்தைப் பல்வேறு அரசியல் கட்சிகள் எதிர்ப்புக்கு இடையே, புதிய நாடாளுமன்றக் கட்டிடத் திறப்பின் போது வழங்கப்பட்டது எப்படி? அதைப்போல, 2014 ஆம் ஆண்டு குடியரசுத் தினத்தன்று அணிவகுப்பு நடத்திய ஊர்திகளில் மேற்கண்ட அரசியலமைப்புச் சட்ட முகப்புரை வாசகங்கள் நீக்கப்பட்டிருந்தது ஏன்? இது சட்டப்படி மிகப் பெரிய குற்றமாக தெரியவில்லையா?

தற்பொழுது நமது தாய் மொழி தமிழை அழிப்பதற்குப் பல்வேறு முயற்சிகளை இந்தி மூலம் புகுத்த, எடுத்து வருகிற பா.ஜ.க. அரசின் கொடுஞ்செயலை கண்டிக்கிற நாம், மதவாத அரசுக்குத் தக்க பாடம் புகட்டுகிற வகையில் தான் நமது முதல்வர் அவர்கள் தக்க நடவடிக்கைகள் எடுப்பதுடன் “ரூ” என்ற எழுத்தை நிதிநிலை அறிக்கையில் பதிவு செய்துள்ளார். அதனை அனைவரும் வரவேற்கிறார்கள்.

ஒன்றிய பா.ஜ.க. அரசின் மொழித் திணிப்பு, நிதி மறுப்பு அநீதிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவும், இந்தியாவின் கூட்டாட்சித் தன்மையைக் காக்கவும், மாநிலங்களின் சுயாட்சியை வென்றெடுப்பதே தீர்வு என்றும் “சரியான முன்னெடுப்பு மூலம் மாநில சுயாட்சியை உறுதி செய்து, மாநில உரிமைகளை நிலை நாட்டினால்தான், தமிழ் மொழியைக் காக்க முடியும். இதற்கான அறிவிப்பு விரைவில் வெளியிடப்படும்” என்றும் சட்டமன்றத்தில் கடந்த செவ்வாய் கிழமை அன்று கவன ஈர்ப்புத் தீர்மான விவாதத்தின் போது, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதில் அளித்துள்ளார்.

தந்தைப் பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், முத்தமிழறிஞர் கலைஞரும் கட்டிக் காத்து வந்த இரு மொழிக் கொள்கை நமது உயிர் கொள்கை! மும்மொழிக் கொள்கையை எந்த காலத்திலும் ஏற்றுக்கொள்ள மாட்டோம். நிதி தரவில்லை என இனமானத்தை அடமானம் வைத்து வெகுமானம் பெறும் கொத்தடிமைகள் நாங்கள் அல்ல.எனவே இந்தியாவின் கூட்டாட்சி தன்மை பாதுகாக்கவும் மாநிலங்களின் சுயாட்சியை வென்றெடுக்கவும் மிக சரியான முன்னெடுப்புகளை செய்ய வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம் என்று நெஞ்சு நிமிர்த்திக் காவிரிக்கரை நாயகன் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் சொல்லி இருக்கிறார்.

அவர் மதவாத சக்திகளுக்கு எதிராக போராடும் மாவீரர்!. மத நல்லிணக்கத்திற்கு முன்மாதிரியானவர்! அவரின் எழுச்சிக் கண்டு இந்துத்துவா சக்திகள் அலறுகின்றனர்! கழகத்தினரால் நாடாளுமன்றத்தில் பா.ஜ.க.வின் முகமூடி அன்றாடம் கிழிக்கப்பட்டு வருகிறது! இந்தியாவைச் சுரண்டும் மோசடியாளர்களுக்குக் கல்லறை கட்டப் புறப்பட்ட அறிவாலய அரிமா! சமூக நீதிப் போராளி தான் தளபதி மு.க.ஸ்டாலின்! ஆம்; ஒரு முறை தெரிந்தோ தெரியாமலோ பா.ஜ.க.வைச் சேர்ந்த எச். இராஜா என்பவர் கூறினார்.

**“ Stalin is more dangerous than Karunanidhi !.... ”**